1987 நவம்பர் 11]

திரு. மா. கதிர்வேலு : தலைவரவர்களே, ஆப்பரேஷன் தியேட்டர் இருப்பதாலும், அடிக்கடி தொழிற்சாலை விபத்துகள் அதிகமாக நடக்கிற பகுதியாக இருப்பதாலும், வெள்ளையூரி லிருந்து வேலூர் வரையிலுள்ள என். எச். சாலையில் ஏற்படுகிற விபத்துக்குள்ளானவர்கள் அங்கேதான் வரவேண்டியிருப்பதாலும் அந்த மருத்துவமனைக்கு ஒரு 'பிளட் பேங்கும்', ஒரு ஆம்புலன்சும் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட விவரங்களை அரசு அறியும். அரசுக்கு இருக்கிற நிதி ஆதாரத்தைப் பொறுத்து அதுபற்றி முடிவு செய்யப்படும்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்ட மருத்துவ மனையில் ஆப்பரேஷன் தியேட்டர் ஒழுங்காகச் செயல்படாத காரணத்தால் அங்கே பயிலுகின்ற மாணவ-மாணவியர்களுடைய கல்விப் பயிற்சி பெரிதும் பாதிக்கப்படுகிறது. அதை நீக்க அரசு முன்வருமா? உரிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட ஒரு புகார் அரசுக்கு இதுவரையில் வரவில்லை. இப்படிப்பட்ட புகார் ஏதேனும் வந்தால் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

41—(* வினா எண் 11162) திரு. என். எஸ். வி. சித்தன் மற்றும் திரு. ஆர். கோவிந்தசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பயிற்சி பெறும் நர்சுகளுக்குக் கொடுக்கப்படும் உணவின் அளவையும் உதவித் தொகையையும் அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

பயிற்சி பெறும் நர்சுகளுக்குக் கொடுக்கப்படும் உணவின் அளவையும் உதவித் தொகையையும் அதிகப்படுத்தல்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : செவிலியர் பயிற்சி பெறும் மாணவிகளுக்கு திங்கள் ஒன்றுக்கு வழங்கப்படும் உதவித் தொகை முதல் வருடம் ரூ. 115-ல் இருந்து 200 ஆகவும், இரண்டாவது வருடம் ரூ. 120-ல் இருந்து 220-ஆகவும், மூன்றாவது வருடம் ரூ. 125-லிருந்து 240-ஆகவும், நான்காவது வருடம் ரூ. 130 லிருந்து 260--ஆகவும் 5-12-1986-ல் உயர்த்தப்பட்டுள்ளது.

திருத்துறைப்பூண்டி பெண்கள் அரசு மருத்துவமனை.

42—(* வினா எண் 11638) திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி பெண்கள் அரசு மருத்துவமனையில் படுக்கை வசதியை அதிகப்படுத்தி, ரத்த சேமிப்பு கிடங்கு மற்றும் அறுவை சிகிச்சை வசதி செய்துதர கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையை விரிவாக்கம் செய்ய வேண்டிய கோரிக்கைகள் வந்துள்ளன. ஆனால் திட்டமதிப்பீடு குறைக்கப் பட்ட காரணத்தால் 1987-88 ஆம் ஆண்டு பகுதி திட்டத்தில் இம்மருத்துவமனையில் 20 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டும் பணியும் மற்ற பணிகளும் சேர்க்க இயலவில்லை. எனினும் இனிவரும் ஆண்டுகளில் இத்துறைக்கு ஒதுக்கப்படும் நிதியைக் கருத்தில் கொண்டு இம்மருத்துவமனையின் விரிவாக்கம் குறித்து பரிசீலிக்கப்படும்.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, திருத்துறைப் பூண்டி மருத்துவமனை இருக்கின்ற பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாகும். 20 படுக்கைகள் கொண்ட பகுதியை இந்த ஆண்டில் கட்டப்போவதாகவும் மேலும் 60 படுக்கைகள் கொண்ட